54—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***714 திரு. த. மனோ தங்கராஜ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் நகராட்சியில் சுத்திகரிக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இரணியல் பேரூராட்சி மற்றும் 319 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறவும், ஏற்கெனவே பயனில் உள்ள பத்மநாபபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் காட்டாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை மேம்படுத்தவும், குழித்துறை ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு பொது சுத்திகரிப்பு நிலையத்துடன்கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 169 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் ஒரு பயனாளியான பத்மநாபபுரம் நகராட்சியில் குடிநீர்த் திட்டப் பணிகளைச் செயல்படுத்த ஜெர்மானிய நிதி உதவித் திட்டத்தின்கீழ் 14 கோடியே 87 இலட்சம் ரூபாய்க்கு நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.*

திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட*

பத்மநாபபுரம் நகராட்சி மக்கள்தொகை அதிகமாகக் கொண்ட பகுதி. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய அனைத்து வார்டுகளிலும் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்து வருகிறது. தற்போது அங்கு செயல்பட்டு வருகின்ற குடிநீர்த் திட்டங்களின்கீழ் 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இருக்கின்றன. இவை 20 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட திட்டமாதலால் அதில் சுத்திகரிப்பு வசதி இல்லாமல் இருக்கிறது. தற்போது தமிழகத்தில் வழங்கப்பட்டுவரும் 90 L.P.C.D. அளவிற்கும் குறைவாக, 50 L.P.C.D. அளவிற்குத்தான் தண்ணீர் வழங்கப்படுகிறது. அதுவும், 3 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் வழங்கக்கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது. மேலும், மின் பிரச்சினை, மழை போன்ற இயற்கை இடர்பாடுகள் ஏற்படுகின்ற நேரங்களில் ஐந்து முதல் ஆறு நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் கிடைக்கிறது. இதற்காக ஒரு மாற்றுத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், 1–8–2012 அன்று நகராட்சி மற்றும் குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்க ஆய்வுக் கட்டணமாக 2 இலட்சம் ரூபாயை அந்த நகராட்சி நிருவாகம் செலுத்தியிருக்கிறது. மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோன்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மனோ தங்கராஜ், இன்னொரு கேள்வி கேட்க வாய்ப்பிருக்கிறது. எனவே, சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. த. மனோ தங்கராஜ்: *அந்தப் புதிய திட்டத்திற்கான ஒப்புதல் 2014 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கான பணிகள் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கின்ற காரணத்தினால், அதைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல பிரச்சினைகளைப் பற்றிச் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மழைப் பொழிவு அதிகமுள்ள மாவட்டம். அங்கு குடிநீர்ப் பிரச்சினையே கிடையாது. அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் சீராக விநியோகிக்கப்படுகிறது. இருந்தாலும் ஒவ்வொரு பகுதிக்கும் எவ்வளவு L.P.C.D. குடிநீர் வழங்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, மாநகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளுக்கு எந்தெந்த அளவு வழங்கப்பட வேண்டுமோ அந்த அளவிற்கு, அதாவது, ஊராட்சிகளுக்கு 40 L.P.C.D. பேரூராட்சிகளுக்கு 70 L.P.C.D. நகராட்சிகளுக்கு 90 L.P.C.D. ஊராட்சிகளுக்கு 40 L.P.C.D. மாநகராட்சிகளுக்கு 110 L.P.C.D. மற்றும் பாதாளச் சாக்கடை இருந்தால் 135 L.P.C.D. என்று குடிநீர் வழங்க வேண்டிய அளவை முழுமையாக வழங்க வேண்டும் என்பதால்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்துள்ளார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இரணியல் பேரூராட்சி மற்றும் 319 ஊரகக் குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள பத்மநாபபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் காட்டாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டம் போன்ற திட்டங்களை மேம்படுத்தவும், குழித்துறையார் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு பொது சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை 169 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்டு, அதன்படி அரசாணை எண் 146, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 1–12–2014–ல் நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பயனாளியான பத்மநாபபுரம் நகராட்சியில் குடிநீர்த் திட்டப் பணிகளைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த சீரிய முயற்சியின் காரணமாக ஜெர்மானிய நிதி உதவித் திட்டத்தின்கீழ் 14 கோடியே 87 இலட்சம் ரூபாய்க்கு நிதி ஆதாரத்தை இறுதி செய்து ஆணை வழங்கியுள்ளார்கள். இத்திட்டத்தின் இதர பயனாளிகளான 8 பேரூராட்சிகள் மற்றும் 374 ஊரகக் குடியிருப்புகளுக்கு நபார்டு வங்கிமூலம் நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்டிருக்கிறது. சில பேரூராட்சிகளில் வருமானம் குறைவாக இருப்பதால், அவர்கள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையைச் செலுத்த முடியாத

2016 ஆகஸ்ட் 11]

சூழ்நிலை உள்ளது. அதற்கும்கூட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் TUFIDCO வங்கி மூலமாக, அவர்களே நிதி ஆதாரத்தை இறுதி செய்து கொடுத்திருக்கிறார்கள். ஆக, இன்றைக்கு தமிழகத்தில் நிதி ஆதாரமில்லாத பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்துவருகிறார்கள். இத்திட்டத்திற்கு நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்ட பின்னர் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம் மழைப்பொழிவு அதிகமுள்ள மாவட்டம் என்று குறிப்பிட்டார்கள். அது உண்மைதான். இந்த மாவட்டத்தில் 4,500—க்கும் மேற்பட்ட குளங்கள் இருந்தன. இப்போது அந்தக் குளங்கள் இரண்டுவிதமான பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றன. ஒன்று, உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து செல்கின்ற கழிவு நீர் ஓடை நேரடியாகச் சென்று நன்னீர் ஆதாரங்களில் கலப்பதனால், நன்னீர் ஆதாரங்கள் அழிந்து வருகின்றன. மற்றொன்று, ஆக்கிரமிப்புகளால் அழிந்து வருகின்றன. இதை உடனடியாகத் தடுப்பதற்கு கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்து, அப்படிப்பட்ட நன்னீர் ஆதாரங்களைப் பாதுகாக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், வேர்கிளம்பி பேரூராட்சியில் இருக்கக்கூடிய 13 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கு நீர் ஆதாரங்களில் தண்ணீர் இல்லை. அவர்கள் ஒரு திட்டத்தினை அரசுக்கு முன்மொழிந்திருக்கிறார்கள். அதேபோன்று, பேச்சிப்பாறை பேரூராட்சியில் இருக்கின்ற 22 மலைக் கிராமங்களுக்குத் தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது. அந்த மலைக் கிராமங்களுக்குத் தண்ணீர் வழங்குவதற்காக ஒரு தனித் திட்டத்தினை அந்த ஊராட்சி மன்றம் தயாரித்து, அரசுக்கு அனுப்பியுள்ளது. அவற்றையும் அரசு நிறைவேற்றித் தருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.

[2016 ஆகஸ்ட் 11

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர்நிலைகளிலெல்லாம் கழிவு நீர் கலப்பதைத் தடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் இன்றைக்கு அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்பதற்காக, ஒவ்வொரு பகுதியிலும் எப்படியெல்லாம் செயல்படுத்த வேண்டும் என்பதற்காகத் திட்டம் தயார் செய்துள்ளார்கள். பல பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டமே கிடையாது என்பதால் பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகளுக்கெல்லாம் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களால் உத்தரவிடப்பட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. சில இடங்களிலே ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. கழிவு நீர் குளத்தில் கலப்பது காலம் காலமாக இருந்து வருகிறது. நீர்நிலைகளிலுள்ள நீர் கெட்டுவிடாமல் இருப்பதற்காக, இவற்றையெல்லாம் தடுக்க வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட 8 பேரூராட்சிகளுக்கு 135 L.P.C.D. *தண்ணீர் ஒரு நபருக்கு, திட்டம் முடிந்தவுடன் வழங்கப்படும். அதேபோல, 374 ஊரகக் குடியிருப்புகளுக்கு 55* L.P.C.D. *ஒரு நபருக்கு வழங்கப்படும். அதுபோக, விடுபட்ட பேரூராட்சிகளை உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவும் கண்டிப்பாக ஆய்வு செய்யப்பட்டு, அவசியமிருப்பின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 11]

திரு. ஏ.எல்.எஸ். லெட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனது முதல் குழந்தை முரசொலிக்கு 75-வது பிறந்த நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) 93 வயதிலும் தமிழக மக்களுக்காகவே உழைத்துக் கொண்டிருக்கும் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இளைஞர்களின் எழுச்சி நாயகரும், நமக்கு நாமே நாயகரும், சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமாகிய அண்ணன் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னை வெற்றி பெறச் செய்த நெல்லை சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதிக்குட்பட்ட மானூர் பகுதியில், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் பணிகள் 50 சதவிகிதம் நிறைவடைந்திருக்கின்றன. தற்போது, அந்த வேலையில் தொய்வு ஏற்பட்டு, அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை முடித்து, மக்களுக்கு விரைவில் குடிநீர் கிடைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தத் திட்டம் நிறுத்தி வைக்கப்படவில்லை. எந்தத் திட்டமும் நிறுத்தி வைக்கப்படவில்லை. ஒப்பந்ததாரர் வழக்கு என்று செல்லும்பட்சத்தில் அதில் தொய்வு ஏற்படலாம். அப்படி ஏதாவது வழக்கு இருந்தாலும்கூட, அதை கண்டிப்பாக, விரைவாக முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 21 ஆயிரம் கோடிக்கு மேல் நிதியொதுக்கி, 5 ஆண்டுக் காலத்திலே, இந்தியாவிலேயே யாரும் கொடுக்காத அளவிற்கு நிதியை வழங்கி, இன்றைக்கு அதிகமான திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, கண்டிப்பாக அந்தத் திட்டமும் ஆய்வு செய்யப்பட்டு, வேகமாக முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2016 ஆகஸ்ட் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

கலைக் கல்லூரி

***1537 திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆவடி தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவது குறித்து கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வியில் இந்தியாவிலேயே உன்னத நிலைக்கு தமிழகத்தை உயர்த்தி,* access and equity *அனைவருக்கும் உயர் கல்வி கிடைக்கச் செய்தல், ஆண், பெண்,* SC/ST, *ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லாத பொதுவான உயர் கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இதயப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உலகத் தர வரிசையில் நமது பல்கலைக்கழகங்களை இடம் பெறச் செய்ய,*